**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**அசல் வழக்கு எண்.118/2023**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வா.சா.3 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. பி.மகாலெட்சுமி, Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | கலீல் ரகுமான் | த/பெ.: | அப்துல் காதர் |
| கிராமம்: | முத்துப்பேட்டை | தாலுக்கா: | முத்துப்பேட்டை |
| மதம்: | முஸ்லீம் | தொழில்: | தனியார் வேலை |
| வயது: | 38 | முகவரி: | முத்துப்பேட்டை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 31.10.2025.

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–**

நான் பிறந்த தேதி 30.03.1987. சாட்சி சொல்வதற்கு தந்தை, வாதியை அழைத்து வந்தார். நான் தாக்கல் செய்த ஆணையுறுதி ஆவணத்தில் உள்ள விவரங்கள் வாதி தரப்பு வழக்கறிஞர் தயார் செய்த ஆவணத்தில் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல. என் உடன் பிறந்த சகோதரிகள் 4 நபர்கள். எனது ஒரு சகோதரி விவாகரத்து ஆகி பிரதிவாதியுடன், அவரும் அவரது மகனும் குடியிருந்து வருகிறார்கள். திருமணம் ஆகாத ஒரு சகோதரியும், பிரதிவாதியுடன்

வசித்து வருகிறார்கள். எனக்கு 2006–ம் ஆண்டில் திருமணம் ஆனது. எனது திருணமத்திற்கு வாதி, பிரதிவாதி யாரும் வரவில்லை என்றால் எனக்கு காதல் திருமணம். நான் திருமணம் செய்த மனைவியுடன் தனியாக வீட்டில் வசித்து வருகிறேன். பிரதிவாதியின் தந்தை இடம் வாங்கி, வீடு கட்டி கொடுத்தார்கள் என்றும், இடம் வாங்கும் காலத்தில் எனக்கு வயது ஒன்று என்றும், அதனால் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கும் பாகம் கேட்டு பிரதிவாதியிடம், வாதியுடன் சேர்ந்து கொண்டு சண்டை போட்டு பிரச்சனை செய்தேன் என்றால் சரியல்ல. இடம் வாங்கியது சம்பந்தமாக, திருமணம் ஆன பிறகு நான் தனியாக வசித்து வருவதால் எனக்கு எதுவும் தெரியாது என்றும், பிரதிவாதிக்கும், எனக்கு ஏற்பட்ட பிரச்சனையால் வாதிக்கு ஆதரவாக மிகைப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி மற்றும் அவரது மகள்கள் வசித்து வருவதால் அதனை விற்பனை செய்தால் அவர் வசிப்பதற்கு வேறு எவ்வித சொத்துக்களும் இல்லை என்று சொன்னால் சரிதான். கடந்த 29.06.2021 அன்று வாதியை, பிரதிவாதி வெந்நீரை ஊற்றி கொலை முயற்சி செய்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வாதி தான், பிரதிவாதியை அடித்து காயப்படுத்தியும், வீட்டை உடைத்தும் மற்றொரு மகனான கமாலுதீன் என்பவருடைய பள்ளிப்படிப்பு ஆவணங்களை எரித்து சேதப்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு

ஆதரவாக நான் கொடுத்துள்ள முதல் விசாரணை சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.